பக்கங்கள 17

# மாலை முரசு

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 ஐப்பசி 23 வெள்ளிக்கிழமை 10.11.2023 அதிர்வு 102

## கைதான பல்கலைக்கழக மாணவர்களுக்குப் பிணை

கொழும்பு – மருதானையில் நேற்று நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தின் போது கைது செய்யப்பட்ட 22 பல்கலைக்கழக மாணவர்கள் பிணையில் விடுவிக் கப்பட்டுள்ளனர்.

சப்ரகமுவ பல்கலைக்கழக 04

# சகல தமிழ்ப் பாடசாலைகளுக்கும் திங்கட்கிழமை விசேட விடுமுறை

### - கல்வி இராஜாங்க அமைச்சர் அறிவிப்பு




- எஸ்.சதீஸ் -

தீபாவளிப் பண்டிகையையொட்டி ஒன்பது மாகாணங்களில் உள்ள அனைத்து தமிழ்ப் பாடசாலைகளுக்கும் எதிர்வரும் 13ஆம் திகதி திங்கட்கிழமை விசேட விடுமுறை வழங்கப்பட்டுள்ளது என்று கல்வி இராஜாங்க அமைச்சர் அருணாசலம் அரவிந்தகுமார் அறி வித்துள்ளார்.

எதிர்வரும் திங்கட்கிழமை

# தீர்வு விடயத்தில் ஆஸ்திரேலியா மத்தியஸ்தம் வகிக்க வேண்டும்!

### அந்நாட்டுத் தூதுவரிடம் சாணக்கியன் கோரிக்கை



– சீ.ஏ. தமிழ்மாறன் –

**"ஆஸ்திரேலிய அரசு, இலங் கைக்கான அரசியல் தீர்வு விட யத்தில் மத்தியஸ்தம் வகிக்க வேண்டும்."**

**- இவ்வாறு இலங்கைக்கான ஆஸ்திரேலியத் தூதுவரிடம் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர் இரா.சாணக்கி யன் கோரிக்கை விடுத்துள் ளார்.**

**ஆஸ்திரேலியத் தூதுவர் பால் ஸ்டீபன்ஸ்க்கும் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியனுக் கும் இடையில் கொழும்பில் நேற்று நடைபெற்ற சந்திப்பின்போதே அவர் இதனைக் கூறி யுள்ளார்.**

**சாணக்கியன் எம்.பி. மேலும் தெரிவிக்கையில்,** 04

## மூதாட்டி கொலை: மூவர் சிக்கினர்!

- எஸ்.நிதர்ஷன் -

யாழ்ப்பாணத்தில் மூதாட்டி ஒருவர் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் மூவர் கைது செய்யப் பட்டுள்ளனர்.

கடந்த ஒக்டோபர் 5ஆம் திகதி அல்வாய் கிழக்குப் பகுதியில் மூதாட்டி ஒருவர் சடலமாக மீட்கப்பட்டிருந்தார்.

சடலம் மீது பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் பிரேத பரிசோ தனை இடம்பெற்று உடற்கூற்று 04

## தமிழ் அரசியல் கைதிகள் மூவர் 15 வருடங்களின் பின் விடுதலை



(ந.லோகதயாளன்)

தமிழ் அரசியல் கைதிகள் மூவர் இன்று விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

2006ஆம் ஆண்டு இலங்கைக் கான பாகிஸ்தான் தூதுவர் பயணித்த வாகனத் தொடரணி மீது இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவம் தொடர்பில் விளக்கமறியலில் 04

## அத்துமீறும் இந்திய மீனவர்களைத் தொடர்ந்து கைது செய்!

### யாழ். மாவட்ட செயலக வாயிலை மூடிப் போராட்டம்



(எஸ்.நிதர்ஷன், பிரபாகரன் டிலக்சன்)

இலங்கைக் கடற்பரப்பில் எல்லை தாண்டி – அத்துமீறி மீன்பிடியில் ஈடுபடும் இந்திய மீனவர்களைத் தொடர்ந்து கைது செய்யக் கோரி யாழ்ப்பாணம் மாவட்ட செயலக வாயிலை மூடி யாழ். மாவட்ட மீனவர் அமைப்புக்கள் ஒன்றிணைந்து போராட்டத்தை முன்னெடுத்தன.

இன்று காலை 10.30 மணியளவில் யாழ். மாவட்ட செயலக முன்றலில் ஒன்றுகூடிய மீனவர்கள் 04



# பாலஸ்தீன் போரை நிறுத்தக் கோரி அக்கரைப்பற்றில் இன்று ஆர்ப்பாட்டம்

(எம்.ஏ.ஹமீஸ்)

பாலஸ்தீனில் இஸ்ரேல் மேற்கொண்டுள்ள போரை நிறுத்தக் கோரி இன்று (10) அக்கரைப்பற்று பிரதேசத்தில் கண்டன ஆர்ப்பாட்டம் ஒன்று இடம்பெற்றது.

அக்கரைப்பற்று பட்டின ஜும்ஆ பள்ளிவாசலில் இடம்பெற்ற ஜும்ஆ தொழுகையைத் தொடர்ந்து ஒன்று திரண்ட பெருந்தொகையான மக்கள் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர்.

அக்கரைப்பற்று பிரதான வீதி வழியாக பேரணியாகச் சென்ற மக்கள் அக்கரைப்பற்று மணிக்கூட்டுக் கோபுர சுற்று வட்டத்தில் ஒன்று கூடி இஸ்ரேலிய தாக்குதலுக்கு எதிர்ப்புத் தெரிவித்தனர்.



பலஸ்தீன மக்களின் நிம்மதிக்காகவும், மரணித்த அப்பாவி மக்களின் ஈடேற்றத்துக்காகவும் விஷேட துஆ பிரார்த்தனை இடம்பெற்றது.

இதன்போது அப்பாவிப் பொது மக்கள் கொல்லப்படுவது தடுக்கப் படவேண்டும் எனவும், உடனடியாக போர் நிறுத்தப்பட்டு அங்குள்ள மக்கள் நிம்மதியாக வாழ வழி ஏற்படுத்தப்பட வேண்டும் எனவும் வலியுறுத்திய கோசங்கள் எழுப்பப்பட்டது.

பலஸ்தீன மக்களுக்கு ஆதரவு தெரிவித்தும் இஸ்ரேலிய போர்க் குற்றத்தைக் கண்டித்தும் எழுதப்பட்ட வாசகங்கள் அடங்கிய பதாதைகளை பெருந்திரளான மக்கள் ஏந்தியிருந்தனர்.

# ஹொரவப்பொத்தானையில் விபத்து; 11 பேர் காயமடைந்து ஆஸ்பத்திரியில்!

(அப்துல்சலாம் யாசீம்)

ஹொரவப்பொத்தானை- கெப்பித்திக்கொல்லாவ பிரதான வீதியில் கிவுளக்கடை பகுதியில் வான் ஒன்று விபத்துக்குள்ளானதில் 11 பேர் காயமடைந்துள்ளனர்.

இன்று (10) காலை இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

மட்டக்களப்பில் இருந்து வவுனியாவுக்கு நேர்முகத் தேர்வு ஒன்றுக்காக சென்றவர்களே விபத்தில் சிக்கியுள்ளனர்.

வாகனம் வீதியோரம் மின்கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளானது. விபத்தில் காயமடைந்தவர்கள் ஹொரவ்பொத்தான வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டனர்.



அவர்களில் 4 பேர் மேலதிக சிகிச்சைகளுக்காக அனுராதபுரம் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

சாரதியின் அசமந்தத்தால் இந்த விபத்து நிகழ்ந்திருக்கலாம் என்று கருதப்படுகிறது.

விபத்து தொடர்பில் விசாரணைகளை ஹொரவ்பொத்தான பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.




# மாமனிதர் நடராஜா ரவிராஜின் 17ஆவது ஆண்டு நினைவு இன்று

(எஸ். நிதர்ஷன்)

நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் மாமனிதர் நடராஜா ரவிராஜின் 17ஆவது ஆண்டு நினைவு தினம் இன்று வெள்ளிக்கிழமை (10) காலை தென்மராட்சி பிரதேச செயலகம் முன்பாக உள்ள அவரது நினைவுச் சிலை க்கு மாலை அணிவிக்கப்பட்டு உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

இதன்போது மாமனிதர் ரவிராஜின் உருவச் சிலைக்கு மலர்மாலை அணிவித்து, தீபம் ஏற்றி அஞ்சலி செலுத்தப் பட்டது.

அஞ்சலி நிகழ்வில், இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதி



ராஜா, அரசியல் சமூக செயற்பாட்டாளர் க.அருந்தவபாலன், வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் பா.கஜதீபன், சாவகச்சேரிப் பிரதேச சபையின் முன்னாள் உப தவிசாளர் செ.மயூரன், சாவகச்சேரி நகரசபையின் முன்னாள் உறுப்பினர் ஞா.கிசோர், ரவிராஜின் உறவினர்கள், மக்கள் பிரதிநிதிகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

### அரசின் அடிபணிய வைக்கும் செயற்பாடுகளுக்கு இடமளியாது

# நாங்கள் பல்கலைக்கழக சமூகமாக ஒன்றிணைய வேண்டியது அவசியம்!

### ஊழியர் சங்க இணைச் செயலாளர் சிவரூபன் தெரிவிப்பு

(எஸ். நிதர்ஷன்)

பல நெருக்கடிகளை நாட்டு மக்கள் எதிர்நோக்கும் இன்றைய காலச் சூழலில் நியாயத்துக்காகவும், உரிமைக் காகவும் போராடுபவர்களையும் சமூகச் செயற்பாட்டாளர்களையும், தொழிற் சங்கவாதிகளையும், மக்களையும் பாசிச செயற்பாடுகளின் மூலம், அரசு அடக்கி ஒடுக்கி அடி பணிய வைக்கிறது. இந்தச் செயற்பாடுகளை அரசு முன்னெடுத்துவரும் நிலையில் நாம் எமக்குள்ளே பிளவுபட்டு நிற்காது பல்கலைக்கழக சமூகமாக ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்.

இவ்வாறு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊழியர் சங்க இணைச்செயலாளர் த.சிவரூபன் தெரிவித்தார்.

இது தொடர்பில் யாழ்.பல்கலைக்கழக ஊழியர் சங்கம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு-

யாழ். பல்கலைக்கழக மாணவர்களும் கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்களும் இணைந்து 05.11.2023 ஞாயிறுக்கிழமை மட்டக்களப்பு, மயிலத்தமடு – மாதவனைப் பகுதி மேய்ச்சல் தரை ஆக்கிரமிப்புக்கு எதிராகப் போராடிவரும் கால்நடைப் பண்ணையாளர்களுக்கு ஆதரவாக அமைதியான முறையில் ஜனநாயக ரீதியில் போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.

அந்தப் போராட்டம் எவ்வித குழப்பங்களும் இன்றி யாருக்கும் இடையூறுகளுமின்றி நடைபெற்று முடிந்தது. பின்னர் வீடு திரும்பிக் கொண்டிருந்த மாணவர்களை வந்தாறு மூலைப் பகுதியில் இடைமறித்து அவர்களில் 06 மாணவர்களை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இது ஒரு திட்டமிட்ட ஜனநாயக விரோதச் செயற்பாடு ஆகும். இச் செயற்பாடு ஜனநாயக ரீதியில் போராடும் மாண வர்களதும் ஏனையவர்களதும் செயற்பாடுகளை அச்சுறுத்தும், அரச படைகள் மூலம் அடக்கும் நடவடிக்கையாகவே நாம் பார்க்கின்றோம்.

இதனை நாம் வன்மையாகக் கண்டிப்பதோடு, இவ்வாறான செயற்பாடுகளை அரசு எதிர்காலத்தில் முன்னெடுக்கக் கூடாது என்று கோருகின்றோம். கைது செய்யப்பட்டு வழக்குப் பதியப்பட்ட மாணவர்கள் வழக்குகளில் இருந்து விடுவிக்கப்பட வேண்டும் என்றும் வேண்டி நிற்கின்றோம்.

பேரினவாத அரசின் துணையோடு தமிழ் மக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட வன்முறைகள், அவர்களது மரபு ரீதியான வாழிடங்கள் மீதான ஆக்கிரமிப்புக்கள், மொழி, கலாசார அழிப்புக்கள் என்பவற்றின் வாயிலாக தமிழ் மக்கள் இன அழிப்புச் செய்யப்பட்டது. இதன் போது அவற்றிற்கு எதிராக போராடிதம் வாழ்வையே அர்ப்பணித்துத் தமிழர்களைக் காத்துநின்ற உத்தமர்களை “பாசிசவாதிகள்” என்று எவரும் கூறவும் முடியாது. அதனைத் தமிழர்கள் யாரும் ஏற்கவும் மாட்டார்கள்.

பொருளாதார நெருக்கடி, ஜனநாய நெருக்கடி என பல நெருக்கடிகளை நாட்டு மக்கள் எதிர்நோக்கும் இன்றைய காலச் சூழலில் நியாயத்துக்காகவும், உரிமைக்காகவும் போராடுபவர்களையும் சமூகச் செயற்பாட்டாளர்களையும், தொழிற்சங்கவாதிகளையும், மக்களையும் பாசிச செயற்பாடுகளின் மூலம், அரசு அடக்கி ஒடுக்கி அடிபணிய வைக்க முன்வந்துள்ளது.

இவ்வாறான செயற்பாடுகளை அரசு முன்னெடுத்துவரும் நிலையில் நாம் எமக்குள்ளே பிளவுபட்டு நிற்காது பல்கலைக்கழக சமூகமாக ஒன்றிணைந்து செயற்பட வேண்டியது அவசியமாகும். பல்கலைக்கழக சமூகத்தில் ஒரு அங்கம் என்ற ரீதியில் இதனை நாம் வலியுறுத்தி நிற்கின்றோம்.

அதே நேரத்தில் பல்கலைக்கழக மாணவர்களாலும் ஏனையோராலும் தமிழ்த் தேசியம் சார்ந்து ஜனநாயக ரீதியில் முன்னெடுக்கப்படும் அனைத்து செயற்பாடுகளுக்கும் எமது ஆதரவு உண்டு. அச்செயற்பாடுகளில் அவர்களுடன் இணைந்து நிற்போம் .- என்றுள்ளது.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## சகல தமிழ்...

வழங்கப்படுகின்ற விடுமுறைக்குப் பதிலாக வேறு ஒரு சனிக்கிழமை நாளில் பாடசாலைகளை நடத்துமாறு 9 மாகாணங்களில் உள்ள அனைத்து கல்வி வலயத்தின் பணிப்பாளர்களுக்கும் அதிபர்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## தீர்வு விடயத்தில்...

“எனக்கும் ஆஸ்திரேலியத் தூதுவருக்கும் இடையில் இடம்பெற்ற சந்திப்பின் போது சமகால அரசியல் நிலைவரம் தொடர்பாகப் பேசப்பட்டது. மயிலத்தமடு – மாதவனைப் பகுதியில் காணப்படும் பிரச்சினைகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது அந்தப் பிரச்சினைகளுக்கான தீர்வுகள் பற்றியும் என்னிடம் ஆஸ்திரேலியத் தூதுவர் கேட்டறிந்தார்.

அதேவேளை, எமது கட்சியின் எதிர்கால மாநாடு தொடர்பாகவும், இளைஞர்கள் மற்றும் புத்திஜீவிகள் நாட்டை விட்டு வெளியேறுவது தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டன.

ஆஸ்திரேலியாவும் எமது நாட்டைப் போல் கூட்டாச்சி (சமஷ்டி) அரசியல் அமைப்பைக் கொண்ட நாடாகும். அங்கு மாநிலங்கள் போல் இங்கு மாகாணங்கள் காணப்படுகின்றன. அங்கு மற்றைய நாடுகளைப் போல் அல்லாது இலங்கையைச் சேர்ந்த புலம்பெயர்ந்த சிங்களவர்கள், தமிழர்கள், முஸ்லிம்கள் எனப் பலரும் வாழ்ந்து வருகின்றார்கள். அந்த அடிப்படையில் இலங்கை அரசு, ஆஸ்திரேலியாவை நடுநிலைமை வகிக்கும் நாடு என ஏற்றுக்கொள்ளும் என்ற ரீதியில் ஆஸ்திரேலிய அரசானது எமக்கான அரசியல் தீர்வு விடயத்தில் மத்தியஸ்தம் வகிக்க வேண்டும் என்றும் தூதுவரிடம் வலியுறுத்தினேன்.” – என்றார்.

## தமிழ் அரசியல்...

வைக்கப்பட்டிருந்த சந்தேகநபர்கள் மூவரையும் நீண்ட விசாரணைக்குப் பின்னர் கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி மஹேன் வீரமன் இன்று விடுதலை செய்ய உத்தரவிட்டுள்ளார்.

அந்தப் பிரதிவாதிகளுக்கு எதிராக முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்படாத காரணத்தாலே அவர்கள் விடுவிக்கப்படுகின்றனர் என்று நீதிபதி தனது தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளார்.

கனகரத்தினம் ஆதித்தியன், யோகராஜா நிரோஜன் மற்றும் சுப்பிரமணியம் சுரேந்திரராஜா ஆகிய மூவரே இவ்வாறு விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

இந்த மூன்று பிரதிவாதிகளும் 15 வருடங்களாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

கொழும்பு – கொள்ளுப்பிட்டி பகுதியில் 2006ஆம் ஆண்டு ஓகஸ்ட் 14ஆம் திகதி வாகனத் தொடரணி மீது குண்டு வீசி தாக்குதல் நடத்தி அப்போதைய பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர் பசீர் அலி முகமதுவைப் படுகொலை செய்ய சதி செய்யப்பட்டது எனக் குற்றம் சாட்டப்பட்டே குறித்த மூவரும் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## மூதாட்டி கொலை...

மாதிரிகளை அரச பகுப்பாய்வுக்காக சட்ட வைத்திய அதிகாரி வைத்தியர் வாசுதேவா அனுப்பி வைத்திருந்தார். அதன் அறிக்கையில் மூதாட்டி கழுத்து நெரித்துக் கொலை செய்யப்பட்டுள்ளார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்நிலையில், மூதாட்டியைப் பராமரித்து வந்த இருவர் மாற்றம் வீட்டு வேலையாள் அடங்கலாக மூவரைச் சந்தேகத்தின் அடிப்படையில் நெல்லியடி பொலிஸார் நேற்று கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

## கைதான பல்கலைக்கழக...

மாணவர்கள் குழுவொன்று இவ்வாறு கைது செய்யப்பட்டிருந்தனர்.

சப்ரகமுவ பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் வகையில் இந்தப் போராட்டம் நடத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## அத்துமீறும்...

மாவட்ட செயலக வாயிலை மூடி போராட்டத்தை முன்னெடுத்ததோடு, இந்திய மீனவர்களால் தாம் பல துன்பங்களை அனுபவிப்பதாகவும் ஒப்பாரி வைத்து அழுதனர்.

இந்தப் போராட்டத்தில். “இந்திய மீனவர்களே எமது கடல் வளங்களை அழிக்காதே, கடற்படையே அத்துமீறும் இந்திய மீனவர்களைத் தொடர்ந்து கைது செய், கடற்றொழில் அமைச்சரே, ஜனாதிபதியே எமது கோரிக்கைகளை நிறைவேற்றுங்கள்” – என்று கோஷங்களை எழுப்பினர்.

அதன்பின்னர் யாழ். மாவட்ட செயலகம் ஊடாக தமது கோரிக்கைகள் அடங்கிய ஜனாதிபதிக்கான மகஜரை யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் ம.பிரதீபனிடம் போராட்டக்காரர்கள் கையளித்தனர்.

இந்த மகஜரின் பிரதிகளை இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே மற்றும் வடக்கு மாகாண நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் வழங்கவுள்ளதாகவும் மீனவர் சங்கங்களின் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.















# பெரியநீலாவணை பகுதிகளில் மணல் கடத்தல்கள் அதிகரிப்பு

**(பாறுக் ஷிஹான்)**

பெரியநீலாவணை முதல் நிந்தவூர் வரையான பகுதிகளில் மணல் கடத்தல் அதிகரித்துக் காணப்படுகிறது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சட்டவிரோதமாக உரப்பை மூலம் மோட்டார் சைக்கிள் மற்றும் மாட்டு வண்டிகள் ஊடாக கடற்கரை மண் கடத்தும் சம்பவங்கள் அதிகரித்துள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

காலை மாற்றம் மற்றும் இரவு வேளைகளில் இனந் தெரியாத சிலர் இலக்கத் தகடுகள் அற்ற மோட்டார் சைக்கிள் மற்றும் மாட்டு வண்டில்கள் மூலம் அதிக எண்ணிக்கையான உரப்பைகளில் மண் அள்ளிச் செல்கின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் செயற்பாடானது பெரிய நீலாவணை, பாண்டிருப்பு, மருதமுனை, கல்முனை, சாய்ந்தமருது, காரைதீவு, நிந்தவூர் பகுதிகளில் பரவலாக இடம்பெற்று வருகின்றன.

இரவுவேளை, தற்போது ரோந்துச் சேவைகள் இடம்பெறாமையால் இந்தச் சந்தர்ப்பங்களை பயன்படுத்தி இந்தச் சட்டவிரோத செயற்பாட்டை முன்னெடுத்து வருகின்றனர்.



# கர்ப்பிணித் தாய்மாருக்கு போசாக்குச் செயலமர்வு

**(அஸ்ஹர் ஆதம் )**

பொண்டேரா நிறுவனத்தின் அனுசரணையுடன் சாய்ந்தமருது பிரதேச செயலகம் ஏற்பாடு செய்த கர்ப்பிணித் தாய்மார்களுக்கான உணவுப் பாதுகாப்பு மற்றும் போஷாக்கு தொடர்பான செயலமர்வு புதன் கிழமை சாயந்தமருதில் நடைபெற்றது.

பொலிவேரியன் விதாதா வள நிலையத்தில் பிரதேச செயலர் எம்.எம். ஆசிக்கின் ஆலோசனைக்கு அமைய இடம் பெற்ற இந்த நிகழ்வில் பொண்டேரா நிறுவனத்தின் சந்தைப் படுத்தல் முகாமையாளர் எம்.மஹ்பூப் அப்ஸான், நிறுவனத்தின் கிழக்கு மாகாண போஷாக்கு தொடர்பான ஆலோசகர் வபீஸ் அஹ்மத், பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் எம்.என்.எம்.றம்ஸான், நிதி உதவியாளர் எம்.எஸ்.எம்.றியாஸ், திட்டமிடல் அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.பி எம்.அஸ்ஹர் அபிவிருத்தி உத்தியோகத்தர் எச்.எம்.எம்.தில்ஷாத் முன்பள்ளிப் பருவ அபிவிருத்தி உத்தியோகத்தர்களான வை. திருப்பதி, எம்.என்.எஸ். சிறீன் உட்பட பிரதேச செயலக மகளிர் அபிவிருத்திப் பிரிவின் உத்தியோகத் தர்கள் பலரும் கலந்து கொண்டனர்.






# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## நீதித்துறையில் பொறுப்பு கூறல்

இலங்கையின் நீதித்துறை மீது வைத்திருக்கும் நம்பிக்கையை கைவிட்டு விட வேண்டாம் என்று பொதுமக்களை தமது நாடாளுமன்ற உரை மூலம் கோரியிருக்கின்றார் நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ .

“அதேபோல நீதித்துறையினர் தொடர்பில் நாடாளுமன்றத்தில் தெரிவிக்கப்பட்ட கருத்துகளுக்காக நீதித்துறையினரும் குழம்பத் தேவையில்லை. கிரிக்கெட் விவகாரத்தை ஒட்டி நாடாளுமன்றத்தில் நடைபெற்ற விவாதம் நீதித்துறைக்கும் நாடாளுமன்றத்துக்கு இடையிலான முரண்பாடு பற்றியதான விவகாரம் அல்ல. பொதுமக்களின் கருத்துத் தொடர்பில் ஒரு பொதுவான - கூட்டு - இணக்க - நிலைப்பாட்டை உருவாக்குவதற்கான விவாதம் மட்டுமே அது” - என்றும் அவர் சமாதானம் கூறியிருக்கிறார்.

ஏற்கனவே இப்பத்தியில் நாம் பல தடவைகள் சுட்டிக் காட்டியபடி இலங்கையின் நீதித்துறையைப் பாகுபாடற்ற - நேர்மையான - நீதியான - ஒன்றாக இந்த நாட்டின் சிறுபான்மையினர், குறிப்பாகத் தமிழர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை என்பது முழு உண்மை.

இலங்கையின் நீதித்துறையும் கூட பேரினவாத மேலாதிக்கத்தில் மூழ்கிக் கிடக்கவில்லை என்றால், யுத்தக் குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான கொடூரங்கள், மனித உரிமை மீறல்கள் போன்ற விடயங்களை விசாரிப்பதற்கு சர்வதேச புலன் விசாரணை வேண்டுமென்று தமிழர்கள் வற்புறுத்தி இருக்க மாட்டார்கள்.

‘அக்ஷன் ஃபாம்’ ஊழியர்கள் 17 பேர் கொடூரமாக கொல்லப்பட்ட விடயம், திருகோணமலையில் ஐந்து தமிழ் மாணவர்கள் சுட்டுக் கொல்லப்பட்ட விவகாரம் போன்றவற்றின் விசாரணைகளை கணகாணிப்பதற்காக இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அழைப்பின் பேரில் இங்கு வந்து, விசாரணை அமர்வுகளை அவதானித்த பின்னர், நடுவழியில் அந்தப் பணியில் இருந்து வெளியேறியது சர்வதேச நிபுணர்களைக் கொண்ட கண்காணிப்பு குழு. அப்போது அது வெளியிட்ட அறிக்கை இலங்கையின் நீதித்துறைக்கு நல்ல நற்சான்று(?) பத்திரம்தான்.

நீதித்துறைக்குள் பல கறுப்பு ஆடுகள் புகுந்துள்ளமை நீதி அமைச்சருக்கும் நன்கு தெரியும். சக நீதித்துறையினர் பலரும் கூட அதனை நன்கு அறிவர்.

நீதியின் பெயரால் அந்தக் கறுப்பு ஆடுகள் இழைக்கும் தவறுகளை பார்த்திருப்பதை தவிர வேறு வழி இல்லை என்ற நிலைமை நீதித்துறையில் தொடரும்போது, அந்த நீதித்துறை மீது மக்கள் நம்பிக்கை வைப்பது எப்படி?

நீதித்துறையின் சுயாதீனம் எந்த விதத் தலையீடும் இன்றிப் பேணப்பட வேண்டும். அப்போதுதான் அது நீதியான முறையில் பரிபாலனம் செய்யப்படலாம் என்பது முழு உண்மை. ஆனால் அந்த சுயாதீனத்துக்குள் - நீதித்துறைக்கான தனித்துவ உரிமைக்குள் - புகுந்து கொண்டு, நீதித்துறையையே சின்னாபின்னமாக்கும் கறுப்பு ஆடுகளை கண்டு பிடித்துக் கட்டுப்படுத்தவும், களை எடுக்கவும் என்ன நீதியான முறைமை இங்கு இருக்கின்றது? அதுதான் நீதித் துறைக்குள் இருக்கும் பிரச்சினை. நீதித்துறையினருக்கும் கடுமையான பொறுப்பு கூறல் பொறிமுறை வேண்டும். அது வராத வரையில் நீதித்துறை நீதியாக இயங்கினாலும் கூட, அதற்கு சான்றளிக்க முடியாத நிலையே தொடரும். அது தவிர்க்க முடியாதது.

# ஆனையிறவு பகுதியில் வைத்து கஞ்சாவுடன் இளைஞன் கைது!

கஞ்சாவுடன் பயணித்த இளைஞன் ஆனையிறவு வீதிச் சோதனை நிலையத்தில் வைத்து இராணுவ புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கிளிநொச்சி – ஆனையிறவு வீதி சோதனை நிலையத்தில் நேற்று (09) மாலை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

உடுத்துறை பகுதியில் இருந்து கஞ்சாவுடன் இளைஞர் ஒருவர் செல்வதாக இராணுவ புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த தகவலுக்கு அமைய ஆனையிறவு பகுதியில் வைத்து சோதனையிட்ட போது மோட்டார் சைக்கிளுடன் 390 கிராம் கஞ்சாவுடன் வவுனியாவை சேர்ந்த இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.





கைது செய்யப்பட்ட இளைஞன் பளை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.


## வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை - 2023

“கூர்மையாகச் செவிமடுத்துக் கொண்டிருக்கும் விண்ணுடன் பேசுவதற்கான மண்ணின் இடையறாத முயற்சிகளே மரங்கள்.”

-இரவீந்திரநாத் தாகூர் (வங்கக் கவிஞர்)





# ஏகாதிபத்திய நாடுகள்தான் இங்கு பயங்கரவாதத்தை விதைக்கின்றன

## கொழும்பில் பலஸ்தீன ஆதரவுக் கூட்டத்தில் ரவூப் ஹக்கீம்

(எம்.கே. ஷாகுல் ஹமீது )

பலஸ்தீனத்தில் இப்போது நடப்பவை எல்லாம் மிக மோசமான மனிதப் படுகொலைகள். இந்தப் படுகொலைகளை ஊக்குவிக்கும் ஏகாதிபத்திய நாடுகள் தான், பயங்கரவாதத்தை விதைக்கும் விளை நிலங்களாக மாறியிருக்கின்றன.

இவ்வாறு ஶ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவரும், முன்னாள் அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் மிகவும் காட்டமாகத் தெரிவித்தார்.



பாலஸ்தீன விடுதலையை வலியுறுத்தியும், பாலஸ்தீன அப்பாவிகள் மீது இஸ்ரேல் நடத்தி வரும் காட்டுமிராண்டித்தனமான இன அழிப்பை நிறுத்தக் கோரியும் கொழும்பில் 'வீ ஆர் வண்' அமைப்பால் ஏற்பாடு செய்யப்பட்ட "தேசிய சமாதான மாநாடு" செவ்வாய்க்கிழமை மாலை கொழும்பு, ஹைட் பார்க்க மைதானத்தில் நடைபெற்றது.

கொட்டும் மழையிலும் திரண்டிருந்த பெரும் மக்கள் கூட்டத்தில் பௌத்த, இந்து, கிறுஸ்தவ, இஸ்லாமிய மத குருமார்கள், அனைத்து கட்சிகளின் தலைவர்கள் அனைத்து இன, மதங்களை சேர்ந்த பொதுமக்கள், ஆளும், எதிர்க்கட்சிகளை பிரதிநிதித்துவப் படுத்திய தலைவர்கள் எனப் பெருந்திரளான மக்கள் பங்கெடுத்தனர்.

இலங்கைக்கான பாலஸ்தீன தூதுவர் சிறப்பு அதிதியாக கலந்து கொண்ட இந்நிகழ்வில், முன்னாள் ஜனாதிபதியும், ஶ்ரீ லங்கா சுதந்திர கட்சியின் தலைவருமான மைத்திரிபால ஶ்ரீசேன , எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, தமிழ் முற்போக்கு கூட்டணித் தலைவர் மனோ கணேசன், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் தலைவர் ரிஷாத் பதியுதீன், ஐக்கிய குடியரசு முன்னணியின் தலைவர் பாட்டலி ஷம்பிக்க ரணவக்க, நாடாளுமன்ற உறுப்பினர்களான வேலுகுமார், இம்ரான் மஹ்ரூப், இஷாக் ரஹ்மான், எரான் விக்ரமரத்ன, சந்திம வீரக்கொடி, திஸ்ஸ அத்தநாயக்க, கபீர் ஹாஷிம், பௌசி, காதர் மஸ்தான், விஜேத ஹேரத், இலங்கை கம்பியூனிச கட்சியின் செயலாளர், இலங்கை பாலஸ்தீன நற்புறவுச் சங்கத்தின் தலைவர் பிமல் ரத்னாயக்க, ஹரீஸ், முன்னாள் மேல் மாகாண ஆளுனர் அஸாத் சாலி, தமிழ் தேசிய கூட்டமைப்பு சார்பில் சாணக்கியன் இராசமாணிக்கம், அப்துர் ரஹ்மான், மவ்பிம ஜனதா கட்சி தலைவர் திலித் ஜயவீர, அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா பொதுச் செயலர் அர்க்கம் நூராமித், பல்கலைக் கழக நிறுவனர் ஜனகன் விநாயகமூர்த்தி மற்றும் முஸ்லிம் சமூக பிரதிநிதிகள், சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள் என பலரும் கலந்து கொண்டு உரையாற்றினர்.

கூட்டத்தில் ஶ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தொடர்ந்து தெரிவித்துள்ளவை வருமாறு–

கொட்டும் அடைமழையிலும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டு, அல்லல் படும் பலஸ்தீன மக்களுக்காக உங்களுடைய உணர்வுகளை வெளிக்கொணர்வதற்கு வருகை தந்திருக்கும் அனைவருக்கும் எனது மனப் பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இங்கு வந்துள்ள முஸ்லிம் கட்சிகள், ஏனைய கட்சிகளில் இருக்கும் முஸ்லிம் தலைவர்கள் எல்லோரதும் சார்பில், இந்த ஏகாதிபத்திய வல்லரசுகள் எங்களுடைய நாடுகளைச் சூறையாடி ,இஸ்ரேலை ஊக்குவித்து புரியும் மோசமாக யுத்த கொடுமைகளை எப்படியாவது நிறுத்த வேண்டும் என்ற நோக்கத்தில் சமாதானம் கோரும் இந்த கூட்டத்துக்கு, கொட்டும் மழை என்றும் கூட பாராமல் வந்து கலந்து கொண்டு உங்களது ஆதரவைத் தந்தமைக்கு மீண்டும் உங்களை கௌரவப்படுத்துகின்றேன்.

இன்று நடப்பவையெல்லாம் மிக மோசமான மனிதப் படுகொலைகள். இந்தப் படுகொலைகளை ஊக்குவிக்கும் ஏகாதிபத்திய நாடுகள்தான், பயங்கரவாதத்தை விதைக்கின்ற விளை நிலங்களாக மாறியிருக்கின்றன.

எந்த காரணம் கொண்டும், எந்த விதமாகவும் பயங்கரவாதம் உருவெடுக்கின்றபோது, இவ்வாறான அநியாயங்களால் பாதிக்கப்படும் மக்கள் வேறு வழியில்லாமல் அதற்குள் தள்ளப்படுகின்றார்கள் என்பதுதான் உண்மையாக இருக்கின்றது.

நாங்கள் பயங்கரவாதத்தை ஆதரிப்பவர்கள் அல்லர். எங்களுடைய இலங்கையிலும் பயங்கரவாதத்தை உருவாக்கியவர்கள் இதே சியோனிச சக்திகள்தான் என்பதற்கான ஆதாரங்களைப் பேசி இருக்கின்றோம்.

ஆனால், இன்று உண்மையை மூடி மறைப்பதற்காக எடுக்கும் நடவடிக்கைகளை முறியடித்து, அதன் மூலம் ஏகாதிபத்திய சக்திகளுக்கு பின்னால் ஒளிந்து கொண்டு இருக்கும் சியோனிச சக்திகள் முன்னெடுக்கும் இந்த படுமோசமான தாக்குதல்களுக்கு ஒருநாள் பதிலளிக்க நேரும்.

அவர்கள் குற்றவாளிகளாக சர்வதேச நீதிமன்றத்துக்கு முன்னால் கொண்டு வந்து நிறுத்தபடுவார்கள். அவ்வாறு நிறுத்தபடும்வரை எங்களது போராட்டம் தொடரும் . நியாயம் பெறுவதற்கான போராட்டம் எல்லா மூலை முடுக்குகளிலும் வியாபித்து, அதற்காக சகல இன மக்களும் கிளர்ந்தெழுவார்கள். அந்த காலம் வெகு தூரத்தில் இல்லை. பாலஸ்தீனத்துக்கு வெற்றியையும், சுதந்திரத்தை பெற்றுக் கொடுக்கும் வரை எங்களது போராட்டம் ஓயாது.– என்றார்.




# சிறுவர் பாதுகாப்புத் தொடர்பாக விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டம்

(அ.அஸ்வர்)

சிறுவர் பாதுகாப்பு தொடர்பாக கோப்பாய் தேசிய கல்வியியல் கல்லூரி ஆசிரிய மாணவர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டம் நேற்று முன்தினம் (08) கோப்பாய் தேசிய கல்வியியல் கல்லூரி கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

தேசிய கல்வியியல் கல்லூரியின் உப பீடாதிபதி தி.ஜெயகாண்டீபன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட செயலர் அம்பலவாணர் சிவபாலசுந்தரன் கலந்துகொண்டார்.

இதில், சிறுவர்களின் பாதுகாப்பு மற்றும் அபிவிருத்தியில் சிறந்த உள சமூகச் சூழலின் முக்கியத்துவம் மற்றும் சிறந்த பெற்றோராகுதல் தொடர்பில் ஆசிரிய மாணவர்களுக்கு விரிவுரைகள் நடத்தப்பட்டன.

மேலதிக சுகாதார வைத்திய அதிகாரி க.சிவன்சுதன், முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி மாவட்ட செயலக இணைப்பாளர் இ.அமலன் ஆகியோர் பிரதான வளவாளர்களாக கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் உதவி மாவட்ட செயலர் எஸ்.சி.என்.கமலராஜன், தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் மாவட்ட உள சமூக இணைப்பாளர் இ.செந்தூரன், மாவட்ட உள சமூக உத்தியோகத்தர் பா.கோபி மற்றும் தேசிய கல்வியியல் கல்லூரி விரிவுரையாளர்கள், ஆசிய மாணவர்கள் கலந்து கொண்டனர்.



# களுவாஞ்சிக்குடியில் குருதிக் கொடை!

( வி.ரி. சகாதேவராஜா)

மண்முனை தென் எருவில்பற்று பிரதேச செயலக ஊழியர் நலன்புரிச் சங்கத்தின் ஏற்பாட்டில் வருடாந்தம் நடத்தும் இரத்ததான நிகழ்வு இந்த வருடமும் களுவாஞ்சிக்குடியில் நடைபெற்றது.

களுவாஞ்சிக்குடி ஆதார வைத்திய சாலை மற்றும் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை இரத்த வங்கியுடன் இணைந்து ஏற்பாடு செய்த இரத்ததான நிகழ்வு புதன்கிழமை (08) பிரதேச செயலர் திருமதி சிவப்பிரியா வில்வரத்னம் தலைமை வழிகாட்டுதலில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

விளையாட்டுக் கழகங்கள், இளைஞர் கழகங்கள் , கிராம அபிவிருத்திச் சங்கங்கள், மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்கள், பாதுகாப்பு படையினர், பொதுமக்கள் மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டு குருதிக்கொடை வழங்கினர்.



# தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தால் கறுவா மரக்கன்றுகள் விநியோகம்!



தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் வடமாகாண மரநடுகை மாதத்தை முன்னிட்டு மாணவர்களுக்கு இலவசமாக மரக்கன்றுகளை வழங்கி வருகிறது. அத்துடன் மரநடுகையிலும் ஈடுபட்டு வருகிறது.

இதன் ஒரு கட்டமாக கடந்த வியாழக்கிழமை பலாலி வடக்கு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் மாணவர்களுக்கு கறுவா மரக்கன்றுகளை வழங்கியுள்ளது.

பாடசாலை அதிபர் ச. விஜயகுமார் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் கலந்து கொண்டு மரநடுகையில் மாணவர்களின் வகிபாகம் தொடர்பில் உரையாற்றினார்.

இந்த நிகழ்ச்சியில் வடக்குக் கிழக்கில் யுத்தத்தின் பின்னர் பல்வேறு மேம்பாட்டுத்திட்டங்களை முன்னெடுத்துவரும் பெங்களூர் அல்சூர் றோட்டரிக் கழகத்தினரும் பங்கேற்றிருந்தனர்.

கறுவா மரம் தென் இலங்கையில் காணப்படுகின்ற இலங்கைக்கு மட்டுமே உரித்தான ஒரு தாவரம் என்பதோடு பெருமளவு அந்நிய செலவாணியை ஈட்டித்தரும் வர்த்தகப் பயிராகவும் விளங்குகின்றது.

இதன் பொருளாதாரப் பயன்கருதி அண்மைக் காலமாக வடக்கிலும் கறுவாச் செய்கை முக்கியத்துவம் பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# பாடசாலை சென்ற மாணவன் வீதியில் விழுந்து உயிரிழப்பு!

புலத்சிங்கள- கோபவக, கோவின்ன பகுதியைச் சேர்ந்த மாணவன் ஒருவர் நேற்று (09) காலை பாடசாலைக்கு சென்று கொண்டிருந்த போது வீதியில் விழுந்து உயிரிழந்துள்ளார்.

மாணவன் வீட்டுக்கு அருகில் உள்ள வீதியில் விழுந்து உயிரிழந்த நிலையில் மீட்கப்பட்டார்.

ஹொறண வித்யாரத்ன வித்தியாலயத்தில் கல்வி பயின்ற பிரபுத்த பிரபாஸ்வர என்ற பாடசாலை மாணவனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

வீட்டிலிருந்து பாடசாலைக்கு செல்ல பேருந்து நிலையத்துக்குச் சுமார் ஒரு கிலோ மீற்றர் தூரம் பயணிக்க வேண்டும்.

மாணவனின் தந்தை வீட்டில் இல்லாததால், பாடசாலைக்கு செல்வதற்காக வீட்டிலிருந்து நடந்து சென்ற மாணவன், சுமார் 500 மீற்றர் தூரம் நடந்து சென்றபோது வீதியில் மயங்கி விழுந்துள்ளார்.

பின்னர், மாணவன் உடனடியாக ஹொரணை மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போதும் அங்கு மாணவன் உயிரிழந்துவிட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை புலத்சிங்கள பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# கழுத்து அறுக்கப்பட்ட நிலையில் மீட்கப்பட்டது பெண்ணின் சடலம்!

கம்பஹாவில் வீடொன்றில் மர்மமான முறையில் கழுத்தை அறுத்து படுகொலை செய்யப்பட்ட பெண்ணின் சடலம் ஒன்று நேற்றுமுன்தினம் மீட்கப்பட்டுள்ளது என்று கிரிதிவெல பொலிஸார் தெரிவிக்கின்றனர்.


ஊராபொல பிரதேசத்தைச் சேர்ந்த கே.ஏ.சஞ்சீவனி (வயது -35) என்ற ஒரு பிள்ளையின் தாயின் சடலமே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இவரது கணவர் பல வருடங்களாக வெளிநாட்டில் பணியாற்றி வருகின்றார். இந்த நிலையில் இந்தப் பெண்ணின் கணவனின் தாய், தந்தை மற்றும் சகோதரருடன் கணவரின் வீட்டில் வசித்து வந்தமை விசாரணையில் தெரியவந்துள்ளது.

வீட்டின் வரவேற்பறையில் சடலமாக கிடப்பதைக் கண்ட மாமியார், சம்பவம் தொடர்பில் உயிரிழந்த பெண்ணின் தாயாருக்கு தெரியப்படுத்தினார். பொலிஸாருக்கும் அறிவித்துள்ளார்.

சம்பவ இடத்துக்குச் சென்ற பூகொடபதில் நீதிவான் கமல் சமந்தபெரும, பிரேத பரிசோதனைகளை மேற்கொண்டார். சடலத்தை வட்டுப்பிட்டிவல வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்று நீதிமன்றில் அறிக்கையை சமர்ப்பிக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

உயிரிழந்த பெண்ணின் கணவரின் சகோதரன் காணாமல் போயுள்ளார் என்றும் அவரைக் கைது செய்ய விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.


सत्यमेव जयते
இந்திய துணைத் தூதரகம்
யாழ்ப்பாணம்
நல்லதோர் குடும்பம்
சிறப்புரை
திரு. மோகனசுந்தரம்
நகைச்சுவை பேச்சாளர்
இடம் : யாழ்ப்பாண கலாசார மத்திய நிலையம்
காலம் : 18 நவம்பர் 2023 (சனிக்கிழமை)
நேரம் : மாலை 05.00 மணி
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
அனுமதி இலவசம்


+94 703 563213
+94 21 222 8358
www.jride.lk
JRIDE
ஜே ரைட்
ஒன்லைன் ரக்சி அப்
ONLINE TAXI APP FROM JAFFNA
நாங்கள் தயார் நீங்கள் தயாரா?
WE ARE READY ARE YOU READY?
JRIDE TAXI SERVICE
SPEED IT NET
உங்கள் பயணங்களை பாதுகாப்பானதாகவும் மகிழ்ச்சிகரமானதாகவும் செலவு குறைவாகவும் அமைத்துக்கொள்ளுங்கள். இப்போதே Play Store இல் இருந்து JRide - Beyond The Road App இனை இறக்கி உங்கள் தொலைபேசி இலக்கத்தை பயன்படுத்தி உங்கள் கணக்கை பதிவு செய்யலாம்!

# வடமாகாண மரநடுகை மாதம்

## கார்த்திகை 01 - 30, 2023




கார்த்திகையில் மரநடுகை தேசத்தை மாத்திரமல்ல;
தமிழ்த் தேசியத்தின் ஆன்மாவையும் குளிரச்செய்யும்!

**தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம்**







# எச்.என்.டி.ஏ. மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

(அஷ்ரப் ஏ சமத் )

வடக்கு, கிழக்கு உட்பட நாடு முழுவதிலும் உள்ள 19 உயர் தொழில் நுட்பக் கல்வி நிறுவனங்களில் இருந்து உயர் டிப்ளோமா கற்கை நெறிகளை (எச்.என்.டி.ஏ.) பயின்று வெளியேறிய மாணவர்களுக்கான 18 ஆவது உயர் தேசிய டிப்ளோமா சான்றிதழ் வழங்கும் நிகழ்வு கடந்த வாரம் கொழும்பு 7 இல் உள்ள பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் நாடு முழுவதிலும் இருந்து 5 ஆயிரத்து 75 மாணவர்களுக்கு உயர் டிப்ளோமா சான்றிதழ்கள் பேராசிரியர்களால் வழங்கப்பட்டன.

ஸ்ரீ லங்கா உயர்தொழில்நுட்ப கல்வி நிறுவனங்களின் பணிப்பாளர் நாயகம் பேராசிரியர் சி.எஸ்.லோவனகமகே தலைமையில் இந்த நிகழ்வுகள் நடைபெற்றன.

இந்த நிகழ்வில் கொழும்பு, பேராதனை, மொரட்டுவை பல்கலைக்கழகங்களின் பேராசிரியர்கள், காலை, மாலை அமர்வுகளில் அதிதிகளாகக் கலந்துகொண்டு உயர் தேசிய டிப்ளோமா சான்றிதழ்களை வழங்கினர். இறுதி அமர்வில் இந்த நிறுவனங்களின் ஆளுமை கவுன்சிலின் தலைவரும் கல்வியமைச்சின் செயலாளருமான எம்.என். ரணசிங்க பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

# ஹமாஸில் உயிரிழந்த சுஜித்துக்கு இழப்பீடு வழங்குவதற்கு நடவடிக்கை



இஸ்ரேல் – ஹமாஸ் மோதல்களால் உயிரிழந்த இலங்கையரான சுஜித் பண்டாரவுக்கு இழப்பீடு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்தத் தகவலை இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.

யுத்தத்தில் உயிரிழந்த மக்களுக்கு இஸ்ரேல் அரசு வழங்கிவரும் அனைத்து இழப்பீடுகள் மற்றும் கொடுப்பனவுகளை சுஜித் பண்டார குடும்பத்தினருக்கு பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று வேலைவாய்ப்புப் பணியகம் அறிவித்துள்ளது.

வென்னப்புவ பிரதேசத்தைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான சுஜித் பண்டார யடவர 2018 ஆம் ஆண்டு உதவியாளர் பணிக்காக இஸ்ரேலுக்கு சென்றிருந்தார்.

போரில் சுஜித் உயிரிழக்கும் போது அவருக்கு வயது 48 என்று தெரிவிக்கப் படுகின்றது.

தாக்குதலில் உயிரிழந்த சுஜித் பண்டார யடவரவின் சடலம் நேற்றுக் (09) காலை கட்டுநாயக்க விமான நிலையம் ஊடாக இலங்கைக்குக் கொண்டுவரப்பட்டது.

உயிரிழந்தவரின் இறுதிக் கிரியைகள் வென்னப்புவ, துலாவெல, மடவலப்பிட்டி பொது மயானத்தில் எதிர்வரும் சனிக்கிழமை (11) இடம்பெறவுள்ளது என்று அவரின் மனைவி ஜயனி மதுவந்தி தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில், உயிரிழந்த சுஜித் பண்டாரவுக்குச் சாத்தியமான அனைத்து இழப்பீடுகளையும் கொடுப்பனவுகளையும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்து வருவதாக இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.






# புத்தளம் வலய இளையோருக்கு மருத்துவ நல அமைப்பின் பயிற்சி

புத்தளம் கல்வி வலயத்தை சேர்ந்த ஆண்டிமுனை தமிழ் மகாவித்தியாலயம், உடப்பு தமிழ் மகா வித்தியாலயம், புத்தளம் இந்துதமிழ் மகா வித்தியாலயம், புனித மரியாள் தமிழ் வித்தியாலயம், கற்பிட்டி அ.றோ.க. தமிழ் வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளைச் சேர்ந்த க.பொ.த. உயர்தர பரீட்சை எழுதிய 35 மாணவர்கள் நவம்பர் 2 முதல் நவம்பர் 5 ,2023 வரை நடைபெற்ற இத் தலைமைத்துவ பயிற்சி பட்டறையில் பங்கு பற்றியிருந்தனர்.

இது வவுனியா மரக்காரம்பளையில் அமைந்துள்ள மாகாண தகவல் தொழில் நுட்பம் மற்றும் தொலைக்கல்வி மத்திய நிலையத்தில் நான்கு நாள்கள் கொண்ட வதிவிட பயிற்சியாக நடைபெற்றது.

இதுவரையில் பாடசாலை ரீதியில் ஒட்டுமொத்தமாக வெளிக்கொணரப்படாத மாணவர்களது நடிப்புத் திறன் ,வாசிப்பு திறன், எழுத்துத்திறன், கவித்திறன், விவாதத் திறன், முன்வைப்பு திறன் ,முன் வருகைத்திறன், ஏற்றுக்கொள்ளும் திறன் மற்றும் உடல், உள ஆரோக்கிய மேம்பாடு என்பன தூண்டப்படவும் துலங்கவும் இது ஒரு வாய்ப்பாக மாணவர்களுக்கு அமைந்தது.

இந்தப் பயிற்சியானது அனைத்து உலக மருத்துவ நல அமைப்பின் இலங்கைக்கான வதிவிட பிரதிநிதி சு. கிருஸ்ணகுமார் நெறிப்படுத்தலில் இடம்பெற்றது.



# தீயணைப்புத் தொடர்பில் அறிவூட்டல் நிகழ்வு





(அ.அஸ்வர்)

அனர்த்த முகாமைத்துவத்தில் தீயணைப்பு பிரிவினரின் பங்களிப்பு தொடர்பில் அம்பாறை மாநகர தீயணைப்பு பிரிவு உத்தியோகத்தர்களுக்கான அறிவூட்டல் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

அம்பாறை உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலக கேட்போர் கூடத்தில் அம்பாறை மாவட்ட செயலாளர் சிந்தக அபேவிக்ரம தலைமையில் இந்நிகழ்வு இடம்பெற்றது.

மாநகர தீ அணைப்புப் பிரிவு அதிகாரிகளின் கடமைகள், அனர்த்தங்களின் போதான செயற்பாடுகள், உடனடி நடவடிக்கைகள் என்பது தொடர்பில் இங்கு விரிவான விளக்கமளிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் அம்பாறை மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் கமல் நெத்மினி, அம்பாறை நகரசபை செயலாளர் மற்றும் தீயணைப்பு பிரிவு அதிகாரிகள், பணியாளர்கள் கலந்து கொண்டனர்.



# யானை மற்றும் மின்னல் தாக்குதல்களால் உயிரிழந்தோரின் குடும்பங்களுக்கு உதவி!

(பாறுக் ஷிஹான்)

யானை மற்றும் மின்னல் தாக்குதலுக்கு ஆளாகிப் பரிதாபமாக உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு நிதியுதவிகள் கையளிக்கப்பட்டுள்ளன.

இன, மத வேறுபாடின்றி பல்வேறு மனிதாபிமானப் பணிகளை நாடளாவிய ரீதியில் மேற்கொண்டு வரும் தியாகி அறக்கொடை நிதியத்தின் தலைவர் வாமதேவன் தியாகேந்திரனின் சேவை கிழக்கு மாகாணத்தின் பல்வேறு பிரதேசங்களில் விஸ்தரிக்கப்பட்டுள்ளது.



இதற்கமைவாக அம்பாறை மாவட்டத்தின் இறக்காமம், அட்டாளைச்சேனை ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளில் யானை மற்றும் மின்னல் தாக்குதலுக்குள்ளாகி பரிதாபமாக உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு நிதியுதவிகள் செவ்வாய்க்கிழமை(7) வழங்கப் பட்டுள்ளன.

ஊடகவியலாளர் எம்.ரீ.எம்.பாரிஸ் இந்தக் குடும்பங்களின் நிலைமை தொடர்பில் தியாகி அறக்கொடை நிதியத்தின் தலைவர் வாமதேவன் தியாகேந்திரனின் கவனத்துக்குக் கொண்டு வந்தமையை அடுத்து இந்த உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.





# வாத்தியக் குழு மாணவருக்குச் சான்றிதழ்

(ஹஸ்பர்)

திஹாறிய தாறுஸ்ஸலாம் ஆரம்ப பாடசாலையின் வாத்தியக் குழு மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் (08) தாறுஸ்ஸலாம் பாடசாலையில் இடம்பெற்றது.

அண்மையில் திஹாறிய அல் அஸ்ஹர் மத்திய கல்லூரியில் மாணவர்களால் நடத்தப்பட்ட ஆசிரியர் கௌரவிப்பு நிகழ்வில் ஆசிரியர்களை கௌரவிப்பதற்காக வாத்தியக் குழு கலந்து கொண்டமைக்காக அவர்களுக்குச் சான்றிதழ் வழங்கப்பட்டது.



# வீதி திருத்தத்தில் அசமந்தம் விவசாயம் செய்தனர் மக்கள்!

(எஸ். நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் – காரைநகர் – மானிப்பாய் பிரதான வீதியின் மூளாய் பகுதியில் வீதியை இடைமறித்து வீதியில் நெல் விதைத்து நூதனமான முறையில் பிரதேச வாசிகள் இன்று (10) போராட்டத்தில் ஈடுபட்டனர்.

யாழ்ப்பாணம் – மானிப்பாய் – காரைநகர் வீதியின் புனரமைப்பு பணிகள் ஆரம்பிக்கப்பட்டு பொருளாதார ஸ்தீர தன்மை காரணமாக வீதி அபிவிருத்திகள் இடைநிறுத்தப்பபட்டுள்ளன.

இந்த நிலையில் அண்மையில் தற்காலிக புனரமைப்புகள் ஆரம்பிக்கப்பட்டு ஆனைக்கோட்டை முதல் சுழிபுரம் வழக்கம்பரை வரையான வீதி புனரமைப்பு பணிகளுக்கு உள்ளான நிலையில் வழக்கம்பரை முதல் பொன்னாலை வரையான வீதி எதுவித புனரமைப்பும் இன்றி வீதி குளம் போல காட்சியளித்து வருகின்றன.

இந்த நிலையில் இன்று காலை பொன்னாலை மற்றும் மூளாய் பகுதியைச் சேர்ந்த விவசாயிகள் , சிறுவர்கள் , பொதுமக்கள் இணைந்து காரைநகர் – மானிப்பாய் – யாழ்ப்பாணம் பிரதான வீதியில் உழவு இயந்திரம், மாட்டு வண்டில் கொண்டு இடைமறித்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்பொழுது வெள்ளத்தால் நீந்தியா செல்வது !, ரணில் அரசே எங்கள் மீது ஏன் இந்த பாரபட்சம் !, வீதி அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரிகளே உங்களுக்கு கண் இல்லையா !, சைக்கிள் உடைகிறது சட்டை சேறாகிறது நடந்து சென்றால் கால்கள் புண் ஆகிறது!, அரச அதிகாரிகளே எங்களையும் பாருங்கள் !, வழக்கம்பரை முதல் பொன்னாலைவரை வாழும் மக்கள் மந்தைகளா? ஆகிய கோஷங்களை எழுப்பிய வண்ணம் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தொடர்ச்சியாக வீதியில் குளம்போல சேதமடைந்து காணப்பட்ட பகுதியில் ஏர் கலப்பை பூட்டி கற்பூரம் கொழுத்தி தேங்காய் உடைத்து தேவாரம் பாடி ஏர் உழுவது போல ஆற்றுகை செய்து நெல் மணிகளை வீதியில் விதைத்தனர்.

இதனையடுத்து கருத்து தெரிவித்த போராட்டகாரர்கள் எமக்கென இன்று வட்டுகோட்டை பகுதியில் ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் இன்றித் தவிக்கின்றோம் . இருக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் கடமைக்கு இருக்கின்றார்கள்.

வீதியால் பயணிக்கும் பாடசலை மாணவர்கள், வயது முதிர்ந்தவர்கள், பெண்கள், சிறுவர்கள், வாகன சாரதிகள் என பலரும் இதனால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதனால் விபத்துக்களும் ஏற்படுகின்றன. இதனைக் கருத்தில் கொண்டு வீதி அபிவிருத்தி அதிகார சபை வெகு விரைவில் புனரமைப்புப் பணிகளை முன்னெடுக்க வேண்டும். இல்லையெனில் நிச்சயமாக இவ்வீதிகளை விவசாய நிலங்களாக மாற்றுவோம் எனத் தெரிவித்தனர்.

இதனால் சுமார் ஒரு மணித்தியாலம் இந்த வீதியில் போக்குவரத்து தடைப்பட்டது.









# 2026 சட்டப்பேரவை தேர்தலில் பா.ஜ.க. ஆட்சியைப் பிடிக்கும்!

## - தமிழக பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை தெரிவிப்பு



2026 ஆம் ஆண்டு சட்டப்பேரவை தேர்தலில் கொக்கு போல காத்திருந்து தமிழகத்தில் பா.ஜ.க. ஆட்சியைப் பிடிக்கும் என மாநில தலைவர் அண்ணாமலை தெரிவித்துள்ளார்.

பா.ஜ.க. மாநில தலைவர் அண்ணா மலை தி.நகரில் உள்ள கட்சி அலு வலகத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப் பின்போது கருத்து தெரிவிக்கையில்,

என் மண் என் மக்கள் யாத்திரை 103 தொகுதிகளை கடந்திருக்கிறது. இன்னும் 131 தொகுதிகளில் நடைபயணம் மேற்கொள்ளப்பட இருக்கிறது.

எனவே, ஜனவரி இறுதி வாரத்துக்குள் யாத்திரையை முடித்துவிட்டு, நாடாளு மன்ற தேர்தலுக்கு தயாராக திட்டமிட்டு இருக்கிறோம். இதுவரை நடைபயணத்தில் 3 முக்கிய விஷயங்களை கவனித்தோம். தென் தமிழகம் தொடங்கி, பெரம்பலூர், கிருஷ்ணகிரி வரை நடக்கும் சமூக அநீதி. விவசாயத்தை சார்ந்த பிரச்சினைகள். நிர்வாகத்தில் அடிமட்ட அளவில் இருந்து பரவி கிடக்கும் லஞ்சம், ஊழல்.

2024 நாடாளுமன்ற தேர்தலில் இந்த மூன்றும்தான், யார் வெற்றி பெற போகிறார்கள் என்பதை தீர்மானிக்கும். கடவுள் இல்லை, கடவுளை கற்பிப்பவன் முட்டாள் என்ற வாசகங்கள் கோயிலுக்கு வெளியே வைக்கப்படுவதை தமிழக மக்கள் ஏற்றுக்கொள்வதற்கு தயாராக இல்லை. பெரியார் சமூக அநீதிக்கு எதிராக குரல் கொடுத்திருக்கிறார். ஆனால், ஸ்ரீரங்கம் கோயில் அருகே உள்ள பெரியார் சிலையின் கீழ் எழுதியிருக்கும் வாசகத்தை மக்கள் ஏற்றுக்கொள்ள தயாராக இல்லை. அந்த கருத்தை தேவாலயத்தின் முன்போ, மசூதி முன்போ வைக்க ஒத்துக்கொள்வார்களா?

பெரியாரின் கருத்துகளை கோயிலுக்கு வெளியே வைக்க வேண்டும் என்பதற்கு அரசியல் கட்சிகள் ஆதரவு தெரிவித்தால், தி.மு.க, கொம்யூனிஸ்ட், காங்கிரஸ் ஆகிய கட்சிகளுக்கு எதிராக பெரியார் சொன்ன கருத்துகளை அவர்களது கட்சி அலுவலகத்துக்கு வெளியே வைக்கவும் ஆதரவு கொடுப்பார்களா? கோயிலுக்கு வெளியே பெரியாரின் சிலை, அந்த வாசகங்கள் அகற்றப்பட வேண்டும். 2026 இல் தமிழகத்தில் பா.ஜ.க. ஆட்சி அமைக்க மக்கள் வாய்ப்பு கொடுத்தால் பெரியாரின் சிலை எங்கு இருக்க வேண்டுமோ, அங்கு மாற்றப்படும். அந்த சிலைக்கு உரிய மரியாதை பா.ஜ.க. கொடுக்கும்.

2026 இல் பா.ஜ.க. ஆட்சிக்கு வந்தால், கல்விக்காக யாரும் பணம் செலுத்த வேண்டிய நிலை வராது. இப்போது பகை யாளியாக இருப்பது பா.ஜ.க. மட்டும்தான். மற்றவர்கள் பங்காளிகளாகத்தான் இருக்கிறார்கள். பா.ஜ.கவை எதிர்க்க வேண்டும் என்பதற்காக, ஒரு கட்சியின் முன்னாள் அமைச்சர், இன்னொரு கட்சியின் தற்போதைய அமைச்சருக்கு ஆதரவு தெரிவிக்கிறார்.

இண்டியா கூட்டணி வேண்டும் என் பதற்காக பிஹார் முதல்வரின் பேச்சுக்கு முதல்வர் ஸ்டாலினும், கனிமொழியும் இதுவரை வாய் திறக்கவில்லை என்று தெரிவித்துள்ளார்.

# தமிழகம் உள்ளிட்ட 10 மாநிலங்களில் என்.ஐ.ஏ. சோதனையில் 44 பேர் கைது

மியான்மரை சேர்ந்த ரோஹிங்கியா முஸ்லிம்கள் மற்றும் பங்களாதேஷ த்தினர் சட்டவிரோதமாக இந்தியாவுக்குள் ஊடுருவி, எல்லைப்புற மற்றும் தொலை தூர மாநிலங்களில் போலி அடையாள ஆவணங்களுடன் வசிப்பது அதிகரித்து வருகிறது.

இவர்களை சில கும்பல்கள் ஊடுருவச் செய்வதும் இவர்களுக்கு சர்வதேச தொடர்புகள் இருப்பதும் தெரியவந்தது.

இதையடுத்து இவ்வாறு ஆட்கடத்தலில் ஈடுபடும் 5 கும்பல்களுக்கு எதிராக தேசிய புலனாய்வு முகமை எனப்படும் என்.ஐ.ஏ. அதிகாரிகள் 8 மாநிலங்களில் அதிரடி சோதனை நடத்தினர்.

தமிழ்நாடு, தெலங்கானா, கர்நாடகா, ராஜஸ்தான், ஹரியாணா, மேற்கு வங்கம், திரிபுரா, அசாம் ஆகிய மாநிலங்கள் மற்றும் ஜம்முகாஷ்மீர், புதுச்சேரி ஆகிய



யூனியன் பிரதேசங்களில் மொத்தம் 55 இடங்களில் இந்த சோதனை நடை பெற்றது. எல்லைப் பாதுகாப்பு படையினர் மற்றும் அந்தந்த மாநில பொலிஸார் இந்த சோதனைக்கு உதவினர்.

இந்த சோதனையில் 4 கும்பல்களை சேர்ந்த 44 பேரை என்.ஐ.ஏ. அதிகா ரிகள் கைது செய்துள்ளனர். இதில் அதிகபட்சமாக திரிபுராவில் 21 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இதற்கடுத்து கர்நாடகாவில் 10, அசாமில் 5, மேற்கு வங்கத்தில் 3, தமிழ்நாட்டில் 2, புதுச்சேரி, தெலங்கானா, ஹரியாணா ஆகியவற்றில் தலா ஒருவர் என 23 பேர் கைது செய்யப் பட்டுள்ளனர்.

இவர்களிடம் இருந்து கையடக்க தொலைபேசிகள் , சிம் கார்டுகள், பென் டிரைவ்கள் போன்ற டிஜிட்டல் சாதனங்கள், போலி ஆதார் மற்றும் .20 லட்சம் ரூபா பணம் , 4,550 அமெரிக்க டாலர்கள் ஆகியவற்றை என்.ஐ.ஏ. அதிகாரிகள் பறிமுதல் செய்துள்ளனர்.

சட்டவிரோத ஆட்கடத்தல் மற்றும் அதற்கு ஆதரவான வலையமைப்பை தகர்ப்பதற்காக இந்த சோதனை நடத்தப் பட்டதாக என்.ஐ.ஏ. தெரிவித்தது.

# ஹமாஸ் அமைப்பினரின் 130 சுரங்கங்கள் அழிப்பு!

காசாவில் ஹமாஸ் அமைப்பினரின் 130 சுரங்கங்கள் அழிக்கப்பட்டுள்ளன என இஸ்ரேல் இராணுவம் தெரிவித்துள்ளது.

இஸ்ரேலுக்கும், பாலஸ்தீனத்தின் காசா முனையை நிர்வகித்து வரும் ஹமாஸ் அமைப்பினருக்கும் இடையேயான போர் தீவிரமடைந்து உள்ளது. 2 ஆவது மாதத்துக்குள் நுழைந்துள்ள போரில் வான், கடல் மற்றும் தரை என மும்முனை தாக்குதலை இஸ்ரேல் நடத்தி வருகிறது.

இந்த நிலையில் காசாவின் மையப்பகுதிக்குள் இராணுவம் நுழைந்ததாக இஸ்ரேல் இராணுவம் நேற்று முன்தினம் அறிவித்தது.அங்கு ஹமாஸ் அமைப்பினர் மீது தாக்குதல் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர்களின் நீண்ட சுரங்கப்பாதை வலையமைப்பை தகர்க்க தொடங்கி உள்ளதாகவும் இஸ்ரேல் தெரிவித்து உள்ளது.

இதனால் காசா சிட்டியில் இஸ்ரேல் இராணுவ வீரர்களுக்கும் ஹமாஸ் அமைப்பினருக்கும் இடையே கடும் துப்பாக்கி சண்டை நடந்து வருகிறது. இந்த நிலையில் காசாவில் ஹமாஸ் அமைப்பினரின் 130 சுரங்கங்கள் அழிக்கப்பட்டுள்ளன என இஸ்ரேல் தெரிவித்துள்ளது.



காசாவில் சண்டையிட்டு வரும் வீரர்களுடன் இஸ்ரேல் இராணுவத்தின் பொறியாளர்கள் குழுவும் சென்றுள்ளது. அக்குழு ஹமாஸ் அமைப்பின் சுரங்க நிலைகள் மற்றும் ஆயுதங்களை அழிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

சுரங்கங்களின் இருப்பிடங்களை கண்டறிந்து அதனை வெடிவைத்து தகர்த்தனர். இதில் ஹமாஸ் அமைப்பினர் பயன்படுத்தி வந்த 130 சுரங்கங்கள் அழிக்கப்பட்டுள்ளது.

இஸ்ரேல் இராணுவத்தின் தரைவழி தாக்குதலில் பூமிக்கு அடியில் ஹமாசின் உள்கட்டமைப்பு தகர்க்கப்பட்டு வருகிறது என்று இஸ்ரேல் இராணுவம் தெரிவித்துள்ளது.

இந்த நிலையில் போரில் சண்டையிட்டு வரும் ஹமாஸ் அமைப்பினர் கூறும் போது, இஸ்ரேல் இராணுவத்தினரை வெற்றிகரமாக எதிர்கொண்டதாகவும் அதன் டாங்கிகள் மற்றும் வாகனங்களை அழித்ததாகவும் தெரிவித்துள்ளனர்.

# ஏமனின் ஹவுத்தி கிளர்ச்சியாளர்களால் அமெரிக்க விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டது

ஏமனின் ஹவுத்தி கிளர்ச்சியாளர்கள் அமெரிக்க இராணுவ ஆளில்லா விமானத்தை சுட்டு வீழ்த்தியதாக அமெரிக்க அதிகாரிகளும் ஈரானுடன் இணைந்த ஹவுத்தி கிளர்ச்சியாளர்களும் தெரிவித்துள்ளனர்.

யேமன் கடற்கரையில் ஹவுத்தி படைகளால் எம்.கியூ 9 ட்ரோன் சுட்டு வீழ்த்தப்பட்டதாக அமெரிக்க அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதை ஹவுத்தியின் இராணுவ செய்தி தொடர்பாளர் உறுதி செய்துள்ளார்.

அமெரிக்காவின் நெருங்கிய நட்பு நாடான இஸ்ரேல் காசா பகுதியில்



ஹமாஸுடன் போரிட்டு வருவதால், மத்திய கிழக்கில் ஈரான் ஆதரவு குழுக்களின் செயல்பாடுகளுக்கு வொஷிங்டன் எச்சரிக்கையாக இருப்பதால் இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த மாதம், ஏமனில் இருந்து இஸ்ரேலை நோக்கி ஹவுத்திகளால் ஏவப்பட்ட குரூஸ் ஏவுகணைகள் மற்றும் பல ட்ரோன்களை அமெரிக்க கடற்படை போர்க்கப்பல் இடைமறித்து அழித்தது.

இஸ்ரேல்-காசா போரைச் சுற்றியுள்ள பிராந்திய பதட்டங்களை அடுத்து, விமானம் தாங்கி கப்பல்கள், கடற்படை கப்பல்களை அமெரிக்கா மத்திய கிழக்குக்கு நகர்த்தியுள்ளது.

# உக்ரைனின் மீது ரஷ்யா திடீர் தாக்குதல்!

உக்ரைனின் கெர்சன் நகர் மீது ரஷ்யா நடத்திய திடீர் தாக்குதலில் இருவர் உயிரிழந்துள்ளனர்.

உக்ரைன் ரஷ்யா இடையிலான போர் தாக்குதல் பல மாதங்களாக தொடரும் நிலையில், தாக்குதலின் தீவிரம் சற்று குறைந்துள்ளது.

எனினும் இரு நாடுகளும் அவ்வப்போது எதிர் பிராந்தியத்திற்குள் ஏவுகணை ஏவி திடீர் தாக்குதலை நடத்தி வருகின்றனர். அந்த வகையில் நேற்று உக்ரைனின் கெர்சன் நகரில் உள்ள மக்கள் குடியிருப்பு பகுதிகள் மீது ரஷ்யா தாக்குதல் நடத்தி யுள்ளது.

இந்த திடீர் தாக்குதலில் 72 வயது ஆண் ஒருவருடன் சேர்த்து மற்றொரு பெண் என இருவர் உயிரிழந்துள்ளனர்.

அத்துடன். ரஷ்யாவின் இந்த தாக்குதலில் இதுவரை 3 பொதுமக்கள் உயிரிழந்துள்ளனர். மேலும் கிறிஸ்தவ தேவாலயம் ஒன்றும் சேதமடைந்துள்ளது.